


# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



## ஜுமுஆ பேருரை

### தலைப்பு :

## நபி மற்றும் நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ்வின் வாக்குறுதி

### பகுதி – 1

**10 January 2020**

**(14 Jamadi'ul Awwal 1441 A H )**


ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ்
முனீர் அஹ்மது அஸீம் (அலை)



வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு



**Phone No :- 917502272774**

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

# *The Promise of Allah to the Prophet & the Believers (Pt. 1)*

# *நபி மற்றும் நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ்வின் வாக்குறுதி (பகுதி 1)*

உலகெங்கிலும் உள்ள தனது அனைத்து ஸஹாபாக்கள் புதிய சஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினை தெரிவித்த பிறகு ஹஸ்ரத் ஃகலீபத்துல்லாஹ் (அய்) அவர்கள் தஷ்ஹத் தஅவூது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதியப் பின் **"நபி மற்றும் நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ்வின் வாக்குறுதி"** என்ற தலைப்பில் **ஜுமுஆ பேருரையை** வழங்கினார்கள்,

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ تُوبُوٓاْ إِلَى ٱللَّهِ تَوْبَةً نَّصُوحًا عَسَىٰ رَبُّكُمْ أَن يُكَفِّرَ عَنكُمْ
سَيِّـَٔاتِكُمْ وَيُدْخِلَكُمْ جَنَّٰتٍ تَجْرِى مِن تَحْتِهَا ٱلْأَنْهَٰرُ يَوْمَ لَا يُخْزِى ٱللَّهُ
ٱلنَّبِىَّ وَٱلَّذِينَ ءَامَنُواْ مَعَهُۥ نُورُهُمْ يَسْعَىٰ بَيْنَ أَيْدِيهِمْ وَبِأَيْمَٰنِهِمْ يَقُولُونَ رَبَّنَآ
أَتْمِمْ لَنَا نُورَنَا وَٱغْفِرْ لَنَآ إِنَّكَ عَلَىٰ كُلِّ شَىْءٍ قَدِيرٌ ۝

**யா - 'அய்யுஹல்லதீன' ஆமனூ தூபூ 'இலல்லாஹி தவ்பதன் நஸூஹா அஸா ரப்புகும் அன்யுகஃப்பிர அன்கும் ஸய்யிஆதிகும்**

**வயுத்ஹிலகும் ஜன்னாதின் தஜ்ரீ மின்தஹ்திஹல் அன்ஹாரு யவ்ம லா யுஹ்ஸில்லாஹுன் நபிய்ய வல்லதீன ஆமனூ மஅஹூ, நூருஹும் யஸ்ஆ பய்ன அய்தீஹிம் வபி அய்மானிஹிம் யகூலூன ரப்பனா அத்மிம்லனா நூரனாவஹ்ஃபிர்லனா, இன்னக அலா குல்லி ஷய்இன் கதீர்..**

**"நம்பிக்கைக் கொண்டவர்களே! கலப்பற்ற கழிவிரக்கத்துடன் அல்லாஹ்விடம் திரும்புங்கள்.. உங்கள் இறைவன் உங்கள் பாவங்களை உங்களை விட்டு ம் அகற்றி உங்களை த் தோட்டங்களில்(சுவர்க்கத்தில்) நுழையச் செய்யலாம், அவற்றின் கீழே ஆறுகள் ஓடும்.அந்நாளில் நபியையும்,அவருடன் நம்பிக்கை கொண்டவர்களையும் அல்லாஹ் இழிவுபடுத்தமாட்டான்.அவர்களின் ஒளி அவர்களுக்கு முன்னாலும், அவர்களின் வலப்பக்கங்களிலும் விரைந்து செல்லும்,அவர்கள் : எங்கள் இறைவா! எங்களுக்கு, எங்களுடைய ஒளியை நீ முழுமையாக்கி வைப்பாயாக! எங்களுக்கு மன்னிப்பும் அருள்வாயாக ! நிச்சயமாக நீ எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றலுடையவன் என்று கூறுவார்கள் "** (ஸூரா அத்தஹ்ரீம் 66:9)

இந்த குர்ஆனிய வசனத்தின் ஒளியில், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபுதர்(ரலி) மற்றும் ஹஸ்ரத் அபு தர்தா(ர லி) அறிவித்துள்ள ஒரு ஹதீஸை நான் உங்கள் முன்வைக்கிறேன்:

**"நியாயத்தீர்ப்பு நாளில் நான் என் மக்களை அடையாளம் கண்டுகொள்வேன். சஹாபா (தோழர்கள்) அவர் களிடம் கேட்டார்கள்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! , உங்கள் மக்களை எவ்வாறு நீங்கள் அடையாளம் கண்டுகொள் வீர்கள்? (அதற்கு) ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு முன்னால் இருக்கும் ஒளியை வைத்து நான் உங்களை அடையாளம் கண்டுகொள்வேன்".**

ஆகையால், (இந்த) உலகில் ஈமானின்(நம்பிக்கையின்) ஒளியைக் கொண்டவர்கள் இருக்கிறார்கள் , தீர்ப்பு நாளில் இந்த ஒளி யானது அவர்களுக்கு முன்பும் வலதுபுறத்திலும் இருக்கும்.

நீங்கள் ‘ஒளி’ என்ற அத்தியாயத்தைப் படிக்கும்போது , அதாவது, சூரா அல்-நூர் வசனம் 56, அதில் அல்லாஹ்(சுபஹ) கூறுகிறான்:

**"அல்லாஹ் உங்களு ள் நம்பிக்கை கொண்டு , நற்செயலாற்றுபவர்களை, அவர்களுக்கு முன்னிருந்தோரை ஃகலீஃபாக்களாக்கியது போன்று இப்பூமியில் நிச்சயமாக ஃகலீஃபாக்களாக்கி வைப்பதாகவும் இன்னும் அவன் அவர்களுக்காகத் தேர்ந்தெடுத்த அவர்களின் மார்க்கத்தை நிலைப்படுத்துவதாகவும், அவன் அவர்களுக்கு அவர்களுடைய அச்சத்தி ற்குப் பிறகு நிச்சயமாக அமைதியைக் கொண்டு மாற்றி விடுவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான், அவர்கள் என்னையே வணங்குவார்கள் ; அவர்கள் என்னுடன் எதையும் இணை யாக்கவும் மாட்டார்கள்,இதன் பிறகும் எவர் (நன்றியற்றவர்களாய்) நிராகரிப்பார்களோ அவர்களே க் கட்டுப்படாதவர்களாவார்கள். "**

இதுவே எப்போதும் அல்லாஹ்வின் வழி முறையாக இருந்து வந்துள்ளது, மனிதன் தோன்றியது முதற்கொண்டே அவ ன் நிரூபித்து க் கொண்டிருக்கின்ற ஒரு நடைமுறையாகும், அதாவது, இந்த வசனம் நமக்கு உணர்த்துவது போல், அல்லாஹ் தான் தேர்ந்தெடுத்து ள்ள அவனது தூதரை, அவனது நபி யை, அவனது கலீபத்துல்லா ஹ்வை அவனே எழுப்புகின்றான்..இது நம்பிக்கை கொண்ட வர்களுக்கும் நற்செயல்களைச் செய்பவர்களுக்கும் அவ ன் வழங்குகின்ற வாக்குறுதியாகும் என்று இந்த வசனத்தில். அல்லாஹ் கூறுகி ன்றான்.இந்த வாக்குறுதியை , அவன் அவனை திருப்திபடுத்தாத, அவனது போதனைகளுக்கு எதிராகச்

செயல்படுகின்ற அனைவருக்குமாக அல்லாஹ் இதனை ஏற்படுத்தியிருக்கவில்லை, மாறாக, கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், அல்லாஹ் தனது போதனைகளுக்கு எதிராகச் செல்லாதவர்களையே, பூமியில் வழித்தோன்றல்களாக (அவனது கலீஃபாக்களாக / பிரதிநிதிகளாக) உருவாக்குவேன் என்று கூறி யுள்ளான், வெவ்வேறு மனநிலை கொண்ட பல்வேறு வகையான மக்களும் ஒன்று கூடி முடிவெடுக்கின்ற (மற்றும்),மக்கள் ஒன்று சேர்ந்து தேர்ந்தெடுக்கின்ற அப்படிப்பட்ட ஒரு ஃகலீஃபா அல்ல இந்த ஃகலீஃபா. நிச்சயமாக அல்லாஹ் மட்டுமே ( அனைத்து வித) மக்களின் உள்ளங்களையும் அறி கின்றான் இதனால்தான் அவன் இந்த உறுதிப்பாட்டைச் எடுத்து இந்த வாக்குறுதியை அளித்துள்ளான். அதாவது அல்லாஹ்(சுபஹ்) அவர்களுக்கு முன்னிருந்தவர்களிடையே அவன் வழித்தோன்றல்களை ( கலீஃபாக்களை) ஏற்படுத்தியதைப் போலவே, அவனது வழித்தோன்றல்களை (கலீஃபாக்களை) பூமியில் எழுப்புவான்; அதனால் அவர்களுக்காக அவ ன் தேர்ந்தெடுத்து ள்ள அவர்களுடைய மா ர்க்கத்தை அவ ன் அவர்களுக்காக நி லைப்படுத்துவான், அவர்களுடைய அச்சத்திற்குப் பிறகு அதற்கு பதிலாக , பாதுகாப்பையும் அமைதியையும் அவர்களுக்கு வழங்குவான்.

இந்த வசனத்தை நீங்கள் படிக்கும்போது ,அல்லாஹ்(சுபஹ்) [இந்த வசனத்தின்] சொற்களை அமைத்து , இந்த விஷயத்தை நம்மிடையே புரிந்துகொள்ள வைத்துள்ள விதம்,கடந்த காலங்களில் வழித்தோன்றல்களை ஏற்படுத்தியது போலவே ஃகலீஃபாக்களை ஏற்படுத்துவது அவனுடைய நடைமுறையாக இருந்தது என்று அவன் மேலும் துல்லியமாக நமக்குத் தெரிவிப்பது மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது.

எனவே, அந்த வழித்தோன்றல்கள் மனிதனால் தேர்ந்தெடுக்கப்படவில்லை, அவர்கள் ஒரு சபையில் அல்லது ஒரு குழுவில் தேர்தல் நடத்தப்பட்டு வாரிசாக [பிரதிநிதியாக] தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பது மிகவும் தெளிவாக தெரிகி ன்றது. அல்லாஹ் இந்த வாக்குறுதியை அளித்தபோது , அவனே தேர்ந்தெடுக்கப்பட்ட வாரிசை ஏற்படுத்துவதற்கான அனைத்து பொறுப்பையும் எடுத்துக்கொள்கிறான் அவன் அவரை "ரூஹுல் குதுஸ்" எனும் பரிசுத்த ஆவியுடன் அனுப்புகிறான்.

(மனிதனால் அல்ல) அவனே தனது அடியானை தேர்வு செய்கிறான் , மேலும் அல்லாஹ்வே அவனுடைய தூதர்களுக்கு (அல்லது நீங்கள் அவர்களை அழைப்பதுபோல்: அவன் தேர்ந்தெடுத்த அடியார்கள், அவனுடைய தீர்க்கதரிசிகள் அல்லது தூதர்கள் , அவனுடைய ஃகலீஃபாக்களுக்கு ) உதவியும் செய்கிறான் ..அவர்களுக்கு [எல்லா மக்களுக்கும் மேலாக] ஒரு மேன்மையை வழங்குகிறான். இதுவே அல்லாஹ்வின் செயல் நடைமுறையாகும், மனிதன் படைக்கப்பட்டதிலிருந்து அவன் எப்போதும் கற்பித்த [அல்லது நிரூபித்த] வழக்கம் ,அல்லாஹ்(சுபஹ்) திருக்குர்ஆனில் சூரா அல்-முஜாதலாவில் கூறுகிறான், அத்தியாயம் 58, வசனம் 22:

"அல்லாஹ் விதித்துள்ளான்: 'நிச்சயமாக! நானும் என் தூதர்களும் தான் வெற்றி பெறுவோம்'".

வெற்றி, வெற்றியினால் வரும் சந்தோசம், மேம்படுத்துதல், அல்லது ஆதிக்கம் போன்ற வார்த்தைகளை பின்வருமாறு விவரிக்கலாம்: வரலாற்று ரீதியாக அனைத்து தீர்க்கதரிசிகளின் தீவிர ஆசை என்னவென்றால் , அல்லாஹ்வின் பொருட்டுள்ள வாதங்கள் யாராலும் மறுக்க முடியாத வகையில்பூமியில் உறுதியாக நிலைநிறுத்தப்பட வேண்டும்என்பதேயாகும்.

ஆகவே, பெரிய அடையாளங்களின் துணையுடன் , அல்லாஹ் அவர்களின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்துகிறான் , இந்த இறை அடியார்கள்எல்லா இடங்களுக்கும் பரப்ப ஆசைப்பட்ட நீதியின் விதையை அல்லாஹ்இந்த தீர்க்கதரிசிகளின் கையால்விதைக்கிறான் .ஆனால் அல்லாஹ் தீர்க்கதரிசிகளின் பணியை அவர்களின் கையாலேயே முடித்து வைப்பதில்லை, ஆனால்மாறாக, அல்லாஹ் அவர்களின் மரணங்களை அவர்கள் தங்கள் பணியில் தோல்வியடைந்ததைப் போல தோன்றும் சூழ்நிலையிலும், அத்தகைய தருணத்திலும்ஏற்படுத்துகிறான் .இது எதிரிகளுக்கு அவர்களை பரிகாசம் செய்வதற்கான வாய்ப்பை கொடுக்கிறது.

ஆனால் இந்த எதிரிகளின்ஏளனம் மற்றும் கேலிக்குப் பிறகே அல்லாஹ் தனது வல்லமையின் மற்றொரு வெளிப்பாட்டை அனுப்புகிறான்அவன் தொடர்ச்சியான சூழ்நிலைகளை உருவாக்குகிறான் , அது இறுதியில் இந்த தீர்க்கதரிசிகளின் இலக்கை அடைய வழிவகுக்கிறது

அதாவது, அல்லாஹ் தனது வல்லமையை இரண்டு முறை வெளிப்படுத்துகிறான்: முதலாவதாக, அல்லாஹ் (சுப்ஹ்) அவனுடைய தூதரின் வாழ்நாளில் அவர்களின் செயல்களின் மூலமாக, தன் கரங்களின் [அல்லாஹ்வினால் பலப்படுத்தப்பட்ட இறைதூதரின்கரம் ] வலிமையைக் காட்டுகிறான். இரண்டாவதாக, அவனுடைய தூதரின் மரணத்திற்குப் பிறகு , இந்த இறைதூதரின் சீடர்கள் எல்லா வகையான சிரமங்களுக்கும் ஆளாகும் போதும்தனது வல்லமையைகாட்டுகிறான் .எதிரிகள் புதிய உத்வேகத்துடன் தூதரின் பணி அவரது மரணத்தோடு அங்கேயே முடிந்துவிட்டது என நம்பத் தொடங்குவார்கள். இந்த தூதரின் சீடர்களும் இழப்புக்கு [தங்கள் அழிவுக்கு] உள்ளாவார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.இந்த இயக்கத்தின் (ஜமாஅத்) உறுப்பினர்கள் கூட தங்கள் முதுகெலும்பு உடைக்கப்பட்டது போல சந்தேகம் கொள்ளத் தொடங்குவார்கள்.சில மகிழ்ச்சியற்ற நபர்கள்

இந்த தூதரை மறுக்கும் அளவிற்க்குசெல்வார்கள். அப்போதுதான் அல்லாஹ் தனது சக்தியையும் திறனையும் காட்டுவான் , சிரமத்தில் இருக்கும் இந்த சமூகத்தை அவன் காப்பாற்றுவான். எனவே கடைசிவரை சகித்துக்கொள்பவர்கள் சர்வவல்லமையுள்ள அல்லாஹ்விடமிருந்துள்ள இந்த அற்புதத்திற்கு சாட்சிகளாக இருப்பார்கள்.

இது ஹஸ்ரத் அபுபக்கர் (ரலி) காலத்தில் நடந்ததை போன்று உள்ளது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் மரணம் பொருத்தமற்றதாகக் கருதப்பட்டது மற்றும் பல அறியாத நாடோடிகள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) வைமறுத்தனர். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்கள் மீள முடியாத சோகத்தில் இருந்தனர். இந்த முக்கியமான தருணத்தில் , அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்கரை (ரலி) உறுதியாக நிலைபெற செய்தான் , அவர் மூலமாக அல்லாஹ் அவனது வல்லமையின் வெளிப்பாட்டைக் காட்டினான். இந்த வல்லமையின் இரண்டாவது வெளிப்பாடு நிச்சயமாக மிகப் பெரியதாகும்.

ஆகவே, அல்லாஹ்வின் வல்லமையின் இந்த இரண்டாவது வெளிப்பாடு என்னவென்றால், உன்னத நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பிறகு , குலா◌ஃபா-இ-ரஷீதீன், முஜாதித்கள் இருந்தனர் , பின்னர் முந்தைய நூற்றாண்டில் வாக்குறுதியளிக்கப்பட்ட மஸிஹ் ஹஸ்ரத் மிர்சா குலாம் அகமது(அலை) வின் வருகை , மற்றும் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் , அல்லாஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவூத் (ரலி) வை அனுப்பினான். இந்த தற்போதைய நூற்றாண்டிலும் ஒரு முஸ்லிஹ் மவூத் வர உள்ளார்கள், ஏனென்றால் இறை போதனைகள் அதிகார முனைப்புள்ள மக்களால் மிதிக்கப்படுவதையும் அவர்களின் வம்சங்கள் நிறுவப்படுவதையும் அல்லாஹ் நன்கு அறிவான்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அல்லாஹ் தனது கலீபத்துல்லாவை எழுப்பினான், அவர்ஷரீயத்தைக் கொண்ட ஒரு இறைதூதருக்குப் பின்னர் அதாவது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு பின்னர் அல்லாஹ் அனுப்பிய கலீபாத்துல்லாஹ் ஆவார். இந்த அமைப்பில்தான் இந்த சஹிஹ் அல் இஸ்லாம் (இஸ்லாத்தின் இந்த உண்மையான போதனைகள்) புத்துயிர் பெறும் பொருட்டு இஸ்லாத்தின் முன்னேற்றமும் அதன் வெற்றியும் தங்கியிருக்கிறது, இது ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட அமைப்பாகும் , ஏனெனில் இது அல்லாஹ்வினால் வளர்க்கப்பட்டது , சிலர் நம்புவது போல் மனிதனால் அல்ல (அதாவது , ஒருவர் படைத்தவனிடமிருந்து வருகிற இறை வெளிப்பாடு, உத்வேகம் அல்லது இறை செய்தியைப் பெறாவிட்டாலும் தேர்தலின் மூலம் - வாக்குகள் மூலம் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்).

ஆகவே, அல்லாஹ் எங்கு தான் தேர்ந்தெடுக்கப்பட்டவரை அனுப்புகிறானோ அந்த அமைப்பே அருள்பெற்ற அமைப்பாகும், அது ஒரு தீர்க்கதரிசனத்தின் பிரதிபலிப்பு மற்றும் இது அனைத்து வகையான முன்னேற்றத்திற்கும் ஒரு முழுமையான உத்தரவாதம் ஆகும். எனவே, இது குறுகியதாக இருக்க வேண்டிய தலைப்பாகும் - குறுகிய ஆனால் இனிமையானதும் ஆகும், சிறிது சிறிதாக அனைவராலும் புரிந்து கொள்ளக்கூடியதாகும், இன்ஷா-அல்லாஹ், இதே தலைப்பில் அடுத்த வாரம் நான் தொடருவேன் . அல்லாஹ் தனது அருளால் தேவையான ஞானத்தை எனக்கு அளிப்பானாக. [ஆமீன்].

**<u>அறிவிப்புகள்:</u>**

ஆலப்புழாவைச் சேர்ந்த நம் நாய்ப் அமீர் ஹரிஸ் சாஹிப் (அலெப்பி) அவர்களின் மனைவி ஜனபா ரசியா ஹரிஸின் மரணம் குறித்த சோகமான

செய்தியை நான் அறிவிக்கிறேன் . இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

2020 ஜனவரி 08 அன்று , நான் தஹஜ்ஜுத் தொழுகைக்காக விழித்தபோது, இந்த வசனம் பல முறை என் நாவில் வந்தது: இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

நான் வுளு செய்து முடித்ததும் , வுளூவுக்குப் பிறகு செய்யும் துவாவிற்க்கு பதிலாக இந்த வசனம் மீண்டும் பல முறை என் உதடுகளில் வந்தது . சில மோசமான செய்திகள் , கவலைகள், துக்கங்கள் மற்றும் சிரமங்கள் இருக்கும் என்று நான் புரிந்துகொண்டேன் , பின்னர், காலையில் ஒரு பிரச்சினையில் ஒரு சோகமான செய்தி வந்தது , இரவில்மக்ரிப் தொழுகைக்கு பிறகு, ரசியா ஹரிஸ் சாஹிபாவின் மறைவின் சோகமான செய்தி எனக்குக் கிடைத்தது.

எனது வெள்ளிக்கிழமைசொற்பொழிவுகளில் நான் பல முறை அறிவித்தது போல் அவர்கள் மிகவும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார்கள் . அவர்களுக்கு வயது 56. அவர்களின் பிறந்த தேதி வரலாற்று சிறப்பு வாய்ந்தது, ஏனென்றால் அவர்கள் மார்ச் 10 ஆம் தேதி பிறந்தார்கள் [ 10 மார்ச் 1963], மார்ச் 10 ஆம் தேதி தான் நம் ஜமாஅத் உல் சஹிஹ் அல் இஸ்லாம் அதிகாரப்பூர்வமாக மொரீஷியஸில் பதிவுசெய்யப்பட்டது அதுவும் சர்வதேச நோக்கில் . அவர் ஜனவரி 08, 2020 அன்று மாலை 5 மணிக்கு வஃபாத்தானார்கள் (இந்தியாவில் உள்ளூர் நேரம் /கேரளா) , மறுநாள் [ 09 ஜனவரி 2020] காலை 10.00 மணிக்கு அவரது கணவர் நம் நாய்ப் அமீர் ஹரிஸ் சாஹிப் அவரது ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள்.12.30 மணிக்கு (இந்தியா / கேரளாவில் உள்ளூர் நேரம்). அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

அவர் தனது கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளான ஃபிரோஸ் அஹ்மத் சாஹிப் மற்றும் ரோஷ்னி சஹிபாஆகியோரை விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்கள் கேரளாவின் சிராஜ் மக்கினின் நம் முதல் சதர் சாஹிபாவும் ஆவார்கள் . அவர்கள்இறை வெளிப்பாட்டில் மிகவும் நேர்மையானவராகவும், அவர்கள் என்னுடன் வழக்கமான தொடர்பிலும் இருந்தார்கள். அவர் தனது வாழ்க்கையில் நிறைய விஷயங்களைச் சந்தித்த ஒரு பெண்மணி. 2017 ஆம் ஆண்டில் கேரளாவுக்கு எங்கள் முதல் பயணத்தின்போது அவரது வீட்டில் அவரைப் பார்க்க எங்களுக்கு வாய்ப்பு கிடைத்ததுஇது எனக்கும் என் குடும்பத்தினர்க்கும் கிடைத்த மரியாதையாகும்.அவர் எப்போதும் புன்னகையுடன் , கண்ணியமாக, கனிவாக இருந்தார்கள் , அல்லாஹ்வுக்கும், அவனுடைய கலீபாத்துல்லாவுக்கும், தீன்-இ-இஸ்லாமிற்கும் மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள்.

நம்நாய்ப் அமீர் ஹரிஸ் சாஹிப் மற்றும் அவரது குழந்தைகளுடன் இச் சோக நிகழ்வில் பொறுப்புடன் நின்ற ஜமாத் உல் சஹிஹ் அல் இஸ்லாத்தை [இந்தியாவின் பல்வேறு இடங்களில்: கேரளா மற்றும் தமிழ்நாடு] சார்ந்த எனது சீடர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இந்த இறுதி சடங்கில் உதவி கரம் கொடுக்க தயங்காத கேரளாவின் ஜமாத் அஹ்மதியாவுக்கு நான் நன்றி கூறுகிறேன் .அவர்கள் **‘அனைவருக்கும் உண்மையான அன்பு, வெறுப்பு எதுவும் இல்லை’** என்ற உண்மையான குறிக்கோளை வெளிப்படுத்தினர்இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைப் பயன்படுத்துவதற்கான புறக்கணிப்பை அவர்கள் கைவிட்டனர் [அதாவது ,அதே இஸ்லாமிய நம்பிக்கை கொண்டதம் சக சகோதரருக்கு உதவுதல்]. மாஷா -அல்லாஹ். நாம் இப்படித்தான்ஒரு

தீனின்அதாவது இஸ்லாத்தின் சகோதர சகோதரிகளைப் போல வாழ வேண்டும்,

இன்ஷா-அல்லாஹ், சலாத்-உல்-ஜும்மாவுக்குப் பிறகு , நாம் ரசியா ஹரிஸ் சாஹிபாவின்நமாஸ் ஜனாசா காயிப் தொழுவோம் . அல்லாஹ் அவர்களை ஜன்னத்-உல்-ஃபிர்தாவ்ஸில்முபாரக்காக்குவானாக! (ஆசீர்வதிக்கப்பட்டதாக), அவருடைய சொர்க்கம் அவனுக்கு (அல்லாஹ்வின்) மிக நெருக்கமானதாக ஆக்குவானாக!, மேலும் அவர்கள் செய்த அனைத்து தியாகங்களுக்கும் இந்த நூற்றாண்டின் இறை வெளிப்பாடுகளோடு அவர்களுக்கு இருந்த பிணைப்பிற்கும்அவனது ஒளியை அவர் மீது (ரசியா சாஹிபா ) முழுமையாக்குவானாக!அல்லாஹ் தனது அன்பையும் கருணையையும்அவர்கள் மீது பொழிவானாக அவர்களுக்கு சாந்தியை அளிப்பானாக! ஆமீன்!

அல்லாஹ் நம் நாயப் அமீர் ஹரிஸ் சாஹிப் மற்றும் அவரது குழந்தைகளுக்கு தைரியத்தையும் பொறுமையையும் தருவானாக.

இந்த துக்க , சோக தருணத்தில் அல்லாஹ் அவர்களுக்கு தன்னுடைய அண்மையின் ஒளியையும் கருணையையும் அளிப்பானாக,அவனுடையதீன்-இ-இஸ்லாத்தில் நேர்மையுடனும் தக்வாவுடனுன் ராசியா ஹரிஸ் சாஹிபா மற்றும் நேர்மையான சஹாபாக்கள் - விசுவாசிகள், ஆண்கள் மற்றும் பெண்கள் - சொர்க்கம் மற்றும் பூமி படைக்கப்பட்டதிலிருந்து இறை வெளிப்பாடுகளின் பிரகாசத்தையும் வழங்குவானாக!

ஆமீன், சும்ம அமீன், யா ரப்புல் ஆலமீன்

**Translated by:**

**S.H. FAISAL**

**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**